DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 87/2024 |
| Deposition of witness | : | P.W - 1 |
| Name | : | சங்கீதா |
| Father's /Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | மாப்பிள்ளைக்குப்பம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 28 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 29th day January 2025.
Accused present.

**முதல் விசாரணை :–**

ஆஜர் எதிரி எனது கணவர். கடந்த 27.05.2016–ம் தேதி எனக்கும், ஆஜர் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு எனது கணவர் ஆஜர் எதிரி தினமும் குடித்துவிட்டு வந்து அடித்து பிரச்சனை செய்தார். அதனால் எங்கள் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.45/2019 தாக்கல் செய்து விசாரணை நிலுவையில் உள்ளது. கடந்த 16.08.2023–ம் தேதி நள்ளிரவு நான் எனது தாயார் வீடு உள்ள தலத்தாங்குடியில் இருந்த போது ஆஜர் எதிரி குடிபோதையில் வந்து வீட்டு வாசலுக்கு வந்து என்னுடன் நீ வாழ வரனும் இல்லையென்றால் நீ இருக்கக்கூடாது என்று சத்தம் போட்டார். நான் ஆஜர் எதிரியிடம் ஏன் சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டேன் அப்போது ஆஜர் எதிரி என்னை தேவுடியா குச்சிகாரி என அசிங்கமான வார்த்தையால் திட்டினார். ஆஜர் எதிரி என்னை திட்டியதால் எனக்கு மிகவும் அசிங்கமாக இருந்தது. ஆஜர் எதிரி என்னை திட்டி விட்டு கையால் எனது கண்ணத்தில் அடித்து கீழே தள்ளினார். தடுக்க வந்த எனது தாயார் புனிதாவை பார்த்து தேவுடியா குச்சிகாரி என அசிங்கமாக திட்டினார். எனது பொண்டாட்டியை வெளியே அனுப்பிவிடு என திட்டி எனது தாயாரை அடிக்க போனார். எனது பக்கத்து வீட்டில் வசிக்கும் மாரிமுத்து, மகேந்திரன் ஆகியோர்கள் தடுத்து ஆஜர் எதிரியை அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம்

என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்து தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :–

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No.87/2024 |
| Deposition of witness | : | P.W - 2 |
| Name | : | புனிதா |
| Father's /Husband Name | : | சாமிநாதன் |
| Village | : | மாப்பிள்ளைக்குப்பம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 56 |
| Occupation | : | சமையலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 29th day January 2025.
Accused present.

**முதல் விசாரணை :–**

ஆஜர் எதிரி எனது மருமகன். அ.சா.1 சங்கீதா எனது மகள். ஆஜர் எதிரிக்கும் எனது மகளுக்கும் சுமார் எட்டு வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு ஆஜர் எதிரி எனது மகளை அடித்து தொந்தரவு செய்தார். அதனால் எனது மகள் விவாகரத்து கேட்டு வழக்கு போட்டார். 16.08.2023–ம் தேதி இரவு 01.00 மணியளவில் எனது மகளும், நானும் வீட்டில் இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி எங்களை பார்த்து குச்சிகாரி தேவுடியா என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். தடுத்து கேட்ட எனது மகளை கையால் அவரது கண்ணத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டார். என்னையும், பார்த்து குச்சிகாரி தேவுடியா என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். நீ யாரடி கேட்பதற்கு என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். எதிரி திட்டியதால் எனக்கு வேதனையாது. ஆஜர் எதிரியை மாரிமுத்து, மகேந்திரன் என்பவரும் தடுத்து எதிரியை அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக எனது மகள் நன்னிலம் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுகு்க வேண்டி புகார் கொடுத்தார். அ.சா.1 கொடுத்த புகாரில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.